| S. No. வ. நெ. | Subject விஷயம் | Resolution தீர்மானம் |
|---|---|---|

கூடலூர் நகராட்சி (நீலகிரி)
நகர்மன்ற அவசர கூட்டம்
20.04.2022 ம் தேதி புதன் கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறும் இந்நகராட்சியின்
நகரமன்ற அவசர கூட்டத்தின் பொருட்கள்
முன்னிலை:– திருமதி. எஸ். பரிமளா, தலைவர்

1) தமிழ்நாடு அரசு அரசிதழ் (சிறப்பு) எண்.194 நாள் 30.03.2022 மற்றும் அரசாணை(நிலை) எண்.52 நாள் 30.03.2022 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறையில் அனைத்து நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் சொத்துவரி பொது சீராய்வு செய்து 2022–2023 (01.04.2022) முதலாம் அரையாண்டு முதல் மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்திட உத்திரவிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4003/2012/ஆர்1, நாள் 01.04.2022 ல் மேற்படி சொத்துவரி மற்றும் காலியிட வரி எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என வழிகாட்டு நெறிமுறைகள் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 11.04.2022 ம் தேதி அன்று நடைபெற்ற அவசர கூட்டத்தில் கீழ் கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

<u>சொத்துவரி:</u>

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building**) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.10 |
| 601-1200 | 1.15 |
| 1201-1800 | 1.20 |
| >1800 | 1.25 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building**) :

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.30 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 1.30 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.35 |

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 81 A ன்படி மாநில அரசு எந்த ஒரு விகிதத்திலும் எந்த ஒரு தேதி முதலும் சொத்து வரி நிர்ணயம் செய்ய மன்றத்திற்கு அறிவுறுத்தலாம். எனவே அரசு நிர்ணயம் செய்த சொத்துவரி சீராய்வினை கீழ் கண்டவாறு வரி விதிப்பு செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

<u>சொத்துவரி:</u>

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building**) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2.00 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building**) :

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2.00 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

62

அனுமதிக்கப்பட்டது
ச. [signature]

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

தலைவர்
கூடலூர் நகராட்சி (நீலகிரி)